# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

O.S.NO. 75/2017

Deposition of Witness : PW-1

Name : பெருமாள்

Father's Name /W/o : த/பெ. முனியப்ப ரெட்டி

Religion : இந்து

Caste : -

Calling : -

Address : திருமால்பூர் அஞ்சல், நெல்வாய் கிராமம்,
அரக்கோணம் வட்டம்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day 20.02.2024

குறுக்கு விசாரணை:

1. நான் தற்போது எந்த ஊரில் உள்ளேன் என்றால் நெல்வாய் கிராமத்தில் உள்ளேன். பிரதிவாதிகள் பூபாளன், பார்வதி, பிரியா, குமரேசன் ஆகியோர் எந்த ஊர் என்றால் நெல்வாய் கிராமம். ஒரே தெருவில் உள்ளோமா என்றால் ஆம். வழக்கு சொத்திலிருந்து 3 வது வீட்டில் உள்ளேன். தெருவின் பெயர் பெருமாள் கோயில் தெரு. தற்போது பஜனை கோயில் தெரு. பிரதிவாதிகள் வழக்கு சொத்தில் உள்ளார்கள் என்றால் ஆம். பூபாளன் முன் பக்கம் சிமெண்ட் சீட் போட்ட வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஆம். அதற்கு பின் புறம் வீடு கட்டுவதற்கு கடக்கால் போட்டுள்ளார்களா என்றால் ஆம். கடக்கால் தரைமட்டத்திலிருந்து 3 அடி அளவிற்கு இருக்குமா என்றால் இல்லை. தரைமட்டத்தில் போட்டுள்ளார். சிமெண்ட் சீட் போட்ட வீடு உள்ள தெரு கிழக்கு மேற்கு பார்த்தவாறு உள்ளது என்றால் ஆம். வீட்டின் அளவு கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 30 அடியாக உள்ளது என்றால் அளவு எனக்கு

தெரியாது. கிழக்கு மேற்கு அளவில் எந்த பக்கம் காலியாக உள்ளது என்றால் காலியாக எதுவும் இல்லை. மனையின் அகலம் எவ்வளவு என்றால் 18 3/4 அடி. 18 3/4 அடி அகலத்திற்கும் சிமெண்ட் சீட் போட்டுள்ளார்களா என்றால் இல்லை. காலி இடம் விட்டுள்ளார்களா என்றால் ஆம். காலி இடம் எந்த பக்கம் விட்டுள்ளார்கள் என்றால் கிழக்கு பக்கம் உள்ளது.

2. காலி இடம் அளவு எவ்வளவு என்றால் பொது நாராசந்து 3 அடி இருக்கும். பின் பக்கம் போட்டுள்ள கடக்கால் அளவு எவ்வளவு என்றால் தெரியாது. சிமெண்ட் சீட் போட்ட வீட்டிற்கு பின்பக்கம் என்ன திசை என்றால் திசை தெரியவில்லை. நாரா சந்தை அனைவரும் அனுபவித்து வருகிறார்களா என்றால் ஆம். நாரா சந்தின் அளவு தோராயமாக 3 அடி சரியான அளவு தெரியாது. நாரா சந்து அனைவரும் பயன்படுத்தி வருகிறார்கள் என்று நாரா சந்து பற்றி அனைத்து விவரங்களும் வழக்கறிஞரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்து வரைப்படத்தில் நாரா சந்து பற்றி எதுவும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்லவில்லை. பின்புறமாக இருக்கும் பாகத்திற்கு செல்வதற்கு எனக்கு வழி இல்லை. பின்புறமாக இருக்கும் பாகத்திற்கு செல்வதற்கு வழி கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்துக்கள் முதலில் நடேசரெட்டிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் ஆம். நடேசரெட்டிக்கு மொத்தம் எத்தனை பிள்ளைகள் என்றால் அவர்கள் இரண்டு மனைவிகள் மட்டும் தெரியும். என் தந்தையும் அவர் அக்காவும் தெரியும். மற்ற மனைவியின் பிள்ளைகள் பற்றி தெரியாது.

3. நடேசரெட்டின் பேரன் என்ற முறையில் இந்த வழக்கை போட்டுள்ளேன் என்றால் ஆம். என் தந்தை உடன் பிறந்தவர் அர்ஜீனரெட்டி என்றால் இல்லை. அர்ஜீனரெட்டி நடேசரெட்டின் சகோதரர். என் தந்தை பெயர் முனியப்பரெட்டி. என் தந்தையுடன் பிறந்தவர் பெயர் காமாட்சி. அர்ஜீன ரெட்டியும் முனியப்பரெட்டியும் சகோதரர்கள், நடேசரெட்டின் மகன்கள் என்று

சொன்னால் தவறு என்றால் தவறுதான். அர்ஜீன ரெட்டி நடேசரெட்டிக்குதம்பி.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)